Regd. No. M. 4593.

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-0 / பர்மா, மலேயா, 0-1-6 (6 காசு)

குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 3-0-0 / [illegible]

மாலை 19 } ஈரோடு 5-10-1946 புரட்டாசி 19உ. } இலக்கம் 52

சில்லறைக் காசு

("காலி மணிபார்ஸ்")

தேவாரமா? (எ)ன் உற்பத்தியா?

"அன்பே சிவம்" என்ற கொள்கையைக் கொண்ட சைவ மதம் நசித்துப் போய்விடும் போலிருக்கிறதே என்று ஏங்கிக் கொண்டிருப்பவர்கள், துள்ளி எழுங்கள், குதிக்கலாம்! அவர்களுக்கு ஒரு நல்ல சேதி சொல்லப்போகிறேன்! திருப்பனந்தாள் மடாதிபதியவர்கள் 10,000 ரூபாய் மூலதனத்தை ஒதுக்கி வைத்திருக்கிறார்! எதற்காக? "மூவர்" என்று கேள்விப்பட்டிருப்பீர்களே!

ஸ்டாலின், அட்லி, ட்ரூமன் ஆகிய முப்பெரியார் என்றுதானே நினைக்கிறீர்கள்? மடாதிபதிகள் குறிப்பிடும் "மூவர்" யார் யார் தெரியுமா? அப்பர், சம்பந்தர், சுந்தரர்! இவர்களுடைய தேவாரப்பதிகங்களில் 50 பாடல்களை "மனப்பாடஞ்செய்து, பொருள் தெரிந்து, நல்லிசையுடன், பண் ஒன்றப்பாடும்" மாணவர்களுக்கு 50 ரூபாய் விதம் பரிசு அளிப்பதற்காகவே இந்த மூலதனத்தை ஒதுக்கியிருக்கிறார், நமது சைவத்திரு மடத்தலைவராம் தம்பிரானவர்கள்!

"வெளிநாட்டுக் கல்லூரிகளில் விஞ்ஞான ஆராய்ச்சி செய்வதற்காக சர்க்கார் அனுப்பியிருக்கும் பேர்வழிகளில் பெரும்பாலோர் பார்ப்பனராயிருக்கிறார்களே! நம்மவர்களை அனுப்பவில்லையே" என்று ஏங்கினேன்! பலதடவை ஏங்கினேன்! விமானமோட்டும் வேலையைத் தமிழர்கள் ஆயிரக்கணக்கில் கற்றுக்கொள்ளாமலிருக்கிறார்களே! இவர்களுக்கு ஏது அவசரமான காரியம் என்பது கூடத் தெரியவில்லையே என்று சஞ்சலப்பட்டேன்!

என் சஞ்சலத்தை நீக்கிவிட்டார், ஆதீனம் அவர்கள்! தேவாரப் பாடல்களைப் பண் முறையில் பாடுவதற்குப் படைதிரட்ட ஆரம்பித்துவிட்டார்! இனி என்ன குறைவு?

எலும்பைப் பெண்ணுருவாக்கியது, மைலாப்பூரிலே! கற்றூண் மிதந்தது, கூடலூர் என்னும் திருப்பாதிரிப் புலியூரிலே! முதலையுண்ட பாலனை யழைத்தது அவிநாசித் திருப்பதியிலே!

இவ்வளவு அற்புதங்களைச் செய்த நாயன்மார்களைப் போற்றாத நாளெல்லாம் பிறவா நாளல்லவா?

அது சரி! (ஒரு சந்தேகம்!) தம்பிரான் சுவாமிகளே! டாக்டர் வேலைக்குப் படித்தவனுக்கு அடையாளம், நோய் நொடியைப் போக்கவேண்டும்! எஞ்சினியர் பயிற்சி பெற்றவனுக்கு அடையாளம், ஆழமான ஆற்றின் மீது பாலம் கட்டித் தரவேண்டும்! விவசாய ஆராய்ச்சி செய்தவனுக்கு அடையாளம், கட்டாந்தரையிலும்கூட கரும்பு விளையுமாறு செய்ய வேண்டும்!

இவைகளைப் போலவே, தாங்கள் கவலைப்படும் தேவாரம் படித்தவர்கள், எலும்பைப் பெண்ணுருவாக்கா விட்டாலும், பெண்கள் எலும்புருவாகப் போவதையாவது தடுக்கவேண்டாமா? கற்றூணை மிதக்க விட முடியாவிட்டாலும், கட்டுமரத்திலாவது போகத் தெரிய வேண்டாமா? முதலையுண்ட பாலனை அழைக்க முடியாவிட்டாலும், முதலையைப் பார்த்தவுடன் "ஓ"வென்று கத்தாமலிருக்கும் தைரியமாவது இருக்க வேண்டாமா?

வாழ்க்கையில் பலன்படாத ஒரு காரியத்தை—இலக்கியத்திற்காகக்கூட அல்ல—பக்திக்காகச் செய்யத்தூண்டுவது வீண்வேலையல்லவா? ஆறு வருஷம் எஞ்சினியர் பயிற்சி பெற்றுத் தேறியவனுக்குத் தெருத்திண்ணை கட்டக்கூடத் தெரியாதென்றால் எப்படியிருக்கும்?

தேவாரத்தை வளர்ப்பதை விடத் தேனீ வளர்க்கக் கற்றுக் கொடுத்தாலும் பலனுண்டே!

பார்ப்பனீயத்திற்கு அடிமைப் பட்ட நம் மாணவர்கள் சைவத் திருமேனிகளாலும் விலங்கிடப் பட்டால், உலகத்தோடுபோட்டி போடுவது எப்படி, சுவாமிகளே?

"தற்குணையாவது நமக்கு வாயப்பே!" என்று பாலசப் பட்டுவிட்டால், ஆதீனத்திற்கு இருக்கும் அத்தனை செல்வங்களும் மாணவர் வீட்டுக்கு வந்துவிடுமா? வரவில்லையே! வாமுடியாதே! வரவிடாதே ஆதீனம்! வாச்சொல்லாதே, உங்கள் சைவம்!

முதலாளிகளும், பெருச்சாளிகளும்!

"கோவில் வருமானங்களி லிருந்து படிப்புக்கும் பணம் செலவழிக்கக்கூடாது" என்கிறார், திருவனந்தபுரம் சுப்பிரமணிய அய்யர். "ததாஸ்து" என்கிறார்கள், உபாத்தியாயர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள்! (கல்வியைப் பரப்ப இருக்கும் அறிவுக் கொழுந்துகள்!)

இவர்களுடைய வாதம் என்ன தெரியுமா? மத வளர்ச்சிக்காக வென்றே ஒதுக்கப் பட்டதாம், கோவில் சொத்து! அதைக்கொண்டு உலக வாழ்க்கை சம்பந்தமான கல்வியைப் பரப்பக்கூடாதாம்! அப்படியே அடி முட்டாள்களாயிருந்தால் தான் ஆரியத்திற்கு அடிமையாயிருப்பார்களாம்!

சூழ்ச்சி தெரிந்தது! ஆனால் இதிலும் ஒரு சந்தேகம்! மத வளர்ச்சிக்காகத்தானே கோவில் சொத்து இருக்கிறது? அப்படியானால், கோவில் பெருச்சாளிகளுக்கு அக்காரவடிசலும், பொங்கலும், புளியோதரையும், தேங்குழலும், அதிரசமும், எதற்காகக் கொடுக்க வேண்டும்? அர்ச்சனை செய்யத் தட்சணை ஏன்? 200-பவுண்ட் பார்ப்பானை சிலையோடு சிலையாய்த் தூக்கிச் சுமப்பானேன்? (நான் இப்படிக் கேட்கிறேனே என்று திராவிடத் தோழர்கள் எந்த ஊரிலாவது திடீரென்று கீழே போட்டுவிடப் போகிறார்கள்! உடைந்து போவார், அய்யர்!) மதத்தை வளர்ப்பதற்கு அபிஷேகம் எதற்கு? முழுமுதற் கடவுள் நாற்றமெடுத்து விடுவாரா? அப்படியானால் அரச மரத்தடிப் பிள்ளையார் மீது மகாவிஷ்ணு அவதாரம் சாக்கடைச் சேற்றைத் தேய்க்கிறதே! அதனால் மதம் மாண்டா போய்விட்டது? அரச மரத்தடிப் பிள்ளையாரைப் போலவே, ஸ்ரீரங்கம் ரங்கநாதரும், சிதம்பரம் நடராசரும், திருப்பதி வெங்கடாசலபதியும், மதுரை மீனாட்சியம்மனும், பழனி முருகனும், திருவாரூர் தியாகராஜரும், ஏழைச் சாமிகளாக இருக்கலாமே! மற்ற மதங்களின் கடவுள்கள் இந்து மத முதலாளிக் கடவுள்களைப் போலவா, டம்பாச்சாரித்தனம் செய்துகொண்டு, 'மைனர்' விளையாட்டு விளையாடுகின்றன?

"அட மானங்கெட்ட மத பக்தர்களே! உங்கள் மத பக்திக்காக எவ்வளவு பணம் பாழாகிறது! அத்தனை சோம்பேறிப் பார்ப்பனர் ஏமாற்றுப் பிழைப்புப் பிழைக்கின்றனர்!"

அவர்களைச் சொல்வானேன்! நம்மவர்கள்தான் புத்தியை அடமானம் வைத்துவிட்டார்களே! இல்லா விட்டால் மான ஈனமுள்ள எந்தத் தமிழனாவது "தமிழ் தெரியாத" கடவுளைக் காணப்போவானா? அதற்குக் காசும் கொடுப்பானா?

8-9-46ல் நாங்குநேரியில் பெரியார் தலைமையில் நடைபெற்ற கஸ்தூரி ரங்கசாமி வாழ்க்கை ஒப்பந்தத்தின் நினைவாகக் குடியரசுக்கு 3 ரூபாய் நன்கொடை யளிக்கப்பட்டது.

மணமகள் தேவை

நாடார் க்ஷத்திரிய மரபினரும் 24-வயதுடையவரும் மாத வருமானம் ரூ. 80 பெற்றுவருபவருமான வாலிபரொருவருக்கு 20வயதுக்குட்பட்ட இளமங்கை தேவை ஜாதி மதம் எதுவாயினும் சரியே விதவையாயினும் சரியே. கல்வியறிவு பிரியமுடையவராயிருத்தல் வேண்டும். படம் தெரிந்திருத்தல் நலம். வரும் விருப்பங்களை ரகசியமாக வைக்கப்படும்; விபரங்களுக்கு எழுதவும்.

மானேஜர்:
மாசுமரு தமிழ்வாணன், என். கிட்டு,
எங்கும் புகழ்பெற்ற,
மோரீஸ் பிஸ்கட் பாக்டரி,
நெ. 36, லாலாகுண்டா லயன்,
பழைய வண்ணாரப்பேட்டை,
சென்னை.

'நங்கை'

(மாத மிரு புத்தகங்கள்)

ஓர் இனிய தமிழ் வெளியீடு.

அக்டோபர் இரண்டாம் வாரத்தில் வெளிவருகிறது.

விலை அணா மூன்று

எல்லா விடங்களிலும் ஏஜண்டுகள் தேவை.

விவரங்களுக்கு:-

சா. நரசிம்மன்,
'நங்கை' செயலகம், அரக்கோணம்.

நமக்கு வேண்டியது சுயராஜ்யமா? சமதர்ம ராஜ்யமா?

(தோழர் .M. சிங்காரவேலு B.A., B.L.)

(சென்றவாரத் தொடர்ச்சி)

இதுவரையில் சுயராஜ்யப் போக்கையும் சமதர்மத்தின் இலட்சணங்களையும் சுருங்க உரைத்தோம். இனி சமதர்மத்தைக் கோரும் மக்கள் சமதர்ம ராஜ்யத்தை அடைந்தால்தான் இவ்வுலகப்பேற்றை யாவரும் சமமாக அடையமுடியும் என்பதையும், அதனையடையும் மார்க்கத்தையும் சுருக்கி விளக்கிக் காட்டுவோம்.

மக்களுக்கு என்ன வேண்டும்? உணவு, ஆடை, வீடு; கல்வி, வேலை ஆகிய இவ்வைந்தே மாந்தருக்கு முக்கியமாக வேண்டியவை. இவ்வைந்து அவசியங்களில் ஏதேனும் ஒன்று போதுமானதாக இல்லாவிடினும், மக்கள் வாழ்வு குறைவுபட்ட வாழ்வேயாகும். உலகிலுள்ள 200 கோடி மக்களில் இரண்டொரு கோடி மக்களே இவ்வைந்து அவசியங்களையும் மிகுதியாகப் பெற்றுள்ளனர். மற்ற 198 கோடி மக்களுக்கு இவ்வைந்தில் யாதேனுமொன்றாகிலும் இல்லாமலிருக்கும். உண்மையில் இந்தப்பெரும்பான்மையான மக்களுக்கு, இவ்வைந்தும் குறைவுபட்டும், முற்றும் இல்லாமலும் இருப்பதால் அவர்களின்வாழ்வு சாதாரணமாக அற்பவாழ்வாகவும் துக்கம் நிறைந்ததாயுமிருக்கின்றது. கடவுள் இருப்பினும் இல்லாவிடினும், மதங்கள் இருப்பினும் இல்லாவிடினும், ஜாதி இருப்பினும் இல்லாவிடினும், உணவு, ஆடை, வீடு, கல்வி, தொழில், உண்மை, அழகு, இன்பம் ஆகிய இவைகள் மக்களுக்கு நிரம்பி இருத்தல் வேண்டும். மற்றப் பொருள்கள், மக்களுக்கு அனாவசியம். மற்றவையெல்லாம் இவ்வைந்து அத்தியாவசியங்களுக்குப் பின் செல்பவை. இதனை "Food, raiment, shelter, knowledge, labour, truth, beauty and love are primary wants of life and all the rest, are either secondary or unnecessary" என்று கூறுவதுண்டு. அதாவது, உணவு, ஆடை, வீடு, கல்வி, தொழில், உண்மை, அழகு, இன்பம் ஆகியவை மனித வாழ்வுக்கு முக்கியமானவை என்றும், மற்றவையாவும் பின் செல்பவை, அல்லது அனாவசியமானவை என்றும் கூறுவர்.

உலகில் இவற்றை அறிந்து, அரசியலை நடத்துவோர் ஒருவருமில்லை. ராமராஜ்யம், அல்லது பாரத ராஜ்யம் முதல் இந்நாள் வரை, இம்மாபெரும் வாழ்வின் தத்துவத்தை (This great philosophy of life) உணர்ந்து நடந்த அரசு ஒன்றேனுமில்லை. சண்டையிலும், போரிலும், கேளிக்கையிலும், வீண் ஆடம்பரங்களிலும், (vanities of life) அதாவது, வாழ்வின் வியர்த்தங்கள் என்று கூறும் விஷயங்களில் கவனத்தைச் செலுத்தி ராஜ்யங்களை நடத்தி வருகிறார்களே ஒழிய, மக்களுக்கு உணவு போதுமா? ஆடை போதிய அளவில் கிடைக்கின்றதா? வீடு வசதிகள் நிறைந்துள்ளவா? யாவரும் மெஞ்ஞானக் கல்வி அடைந்து வருகின்றார்களா? தொழில் புரிகின்றனரா? உண்மையாக வாழ்கின்றார்களா? அழகை மதிக்கின்றார்களா? இன்புற்று வாழ்கின்றார்களா? என்னும் விஷயங்களில், பண்டைக்கால முதல் நாளைவரை, எந்த ராஜ்யமும் கவனத்தைச் செலுத்தி வந்ததில்லை. வேதகாலமுதல் நேற்று புராணகாலம் வரை, உண்டான வேதவேதாந்தங்களும், சாஸ்திர புராணங்களும் நீதிநியாயங்களும், சரித்திர இதிகாசங்களும், இறந்த பிறகு மோட்சத்திற்கு வழி காட்டுவதற்கும், சிலருடைய சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும் வீண்சண்டை, வீண் போர் முதலியவற்றால் மக்கள் மாள்வதற்கும், அரசர், அமைச்சர், அவர்கள் சந்ததியார் ஆகியவர்களின் பெருமைக்காக எழுதப்படுகின்றனவேயொழிய, பொதுமக்கள் உண்ண உணவு, உடுக்க ஆடை, இருக்க வீடு, அடைய கல்வி, உழைக்கவேலை முதலிய விஷயங்களைப்பற்றி எந்த சாஸ்திரமும், எந்த வேதவேதாந்தங்களும், மதங்களும், இதிகாசங்களும் வரைந்திருப்பதைப் பார்த்திலேம்.

பிராமணர், புரோகிதர், மதாச்சாரியார்கள், (Bishops), ஆர்ச்பிஷப்ஸ் (Archbishops) மௌலானாக்கள், மடாதிபதிகள் ஆகியவர்கள் தங்கள் சுகபோகங்களுக்கு எல்லாவித சாஸ்திரங்களையும் உண்டாக்கிக் கொண்டார்களே ஒழிய கோடானகோடி பாமர மக்களின் சுக வாழ்வுக்குவேண்டிய எதையும் உண்டாக்கவில்லை. மேலும் அவர்கள் அந்தச் சாஸ்திரங்களால் எந்தவித ஞானத்தையும் பெறவில்லை. அந்த ஞானத்தைப் பெற்றுள்ளவர்களை ஆதரிக்கவுமில்லை. எந்த பாதிரி, அல்லது எந்தப் புரோகிதன், அல்லது எந்த முல்லா,

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

குடி அரசு

1946-ம் அக்டோபர் 5௳

மதுவிலக்கு

"மதுவிலக்கு வெற்றியடைந்தாலும் சரி, தோல்வி அடைந்தாலும் சரி அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. சர்க்கார் இந்த (மதுபான) வியாபாரம் செய்யக்கூடாது என்பதுதான் எனது மதுவிலக்குத் திட்டம்"

என்று பெரியார் அடிக்கடி சொல்லுவார். அதன்படியே தான் மதுவிலக்கு அடியோடு நிற்கப்போகிறதோ (நிற்காது) இல்லையோ என்பது ஒருபுறமிருந்தாலும் இம்மாதம் முதல் தேதி முதல் திராவிடநாட்டில் 8-ஜில்லாக்களில் அதாவது 50000 சதுர மைல் விஸ்தீரணமுள்ள பிரதேசத்தில் சுமார் ஒன்றே முக்கால் கோடி (1,75,00,000) மக்கள் வாழும் பிரதேசத்தில் சர்க்கார் மதுபான வியாபாரம் செய்வதை நிறுத்திக்கொண்டு இருக்கிறார்கள். இதனால் சர்க்கார் ஒரு பெரிய தியாகம் ஏதுவும் செய்துவிடவில்லை. இதற்காக எந்தச் சர்க்கார் ஊழியரும் சோறு இல்லாமல் பட்டினி கிடக்கப் போவதில்லை. அவர்களுடைய அந்த மனைவி மக்களும், நகை, பட்டு, இல்லாமல் சினிமா, உற்சவ சல்லாபம் இல்லாமல் தவிக்கப் போவதில்லை. மந்திரி சம்பளம் 500ல் இருந்து 1500 ரூபாய், சட்டசபை மெம்பர்கள் சம்பளம் 75ல் இருந்து 150 ரூபாய், மற்றும் கிம்பளம், அவர்களது சுற்றத்தார் நண்பர்கள், நிபந்தனை அற்ற கூலி ஆகியவர்களுக்குப் பதவி, லைசென்ஸ், பெரியதனம் முதலியவை பெருகிவருகின்றனவே தவிர எவருக்கும் எந்தவித கஷ்டமும் ஏற்பட்டுவிடவில்லை.

மது உற்பத்தி, விற்பனைத் தொழில்களில் இருந்தவர்களுக்குச் சிறு கஷ்டம் சில நாளைக்கு இருக்கலாம். இது பற்றி அதிகக்கவலை இல்லை. சீக்கிரம் பரிகாரம் ஏற்படும்

"மதுபான வளர்ப்பும், கோவில் பெருக்கமும் மன்னர்களுக்கு அரண்" (அதாவது காவல்)

என்பது அரசியல் தத்துவமாகும்.

ஆகவே மனித சமுதாயத்தின் சுதந்திரத்திற்குக் கள்ளும் கோவிலும் விரோதமாகும் என்றாலும் கள்ளினிடத்திலும், கோவிலினிடத்திலும் இயற்கையில் யாதொரு கெடுதியும் இல்லை என்றே கூறுவோம்.

மற்றபடி அவற்றால் ஏற்படும் கெடுதிகள் எதனால்? என்றால் அவற்றைச் சர்க்காரால் மக்களிடம் பரப்பும் முறையினாலும் அவற்றால் சர்க்கார் மக்களிடமிருந்து பயனுபவிக்கச் செய்யப்படும் முயற்சியினாலுமேயாகும்.

கோவில்களில் ஒரு சாமியை (கல்லை) நட்டு வைத்துவிட்டு அதற்குக் கதை, கதவு, காப்பு, தரகன் இல்லாமல் செய்து திறந்த வெளியாய் விட்டுவிட்டால், கோயில்களால் மக்களுக்கும், சமுதாயத்திற்கும் அதிகமான கேடு இல்லை என்று சொல்லலாம் (இதுபற்றி மற்றொருசமயம் விரிப்போம்)

அதுபோலவே கள்ளுக்கும் அதாவது ஒரு இலாக்கா வைத்து அதன் நோக்கம் மது விருத்தியாவதாகவே இருக்கும்படி செய்து அதற்கு எவ்வளவு விலை அதிகரிக்கச்செய்ய முடியுமோ அவ்வளவும் செய்து கள்ளை அதிக போதை (வெறி) உண்டாகும்படியாக எவ்வளவு விஷமாக்க முடியுமோ அவ்வளவு விஷமாக்கி மனிதனுக்குப் பண நட்டமும், புத்திக்கோளாறும் உண்டாகும்படி செய்யாமல் இருந்தால் கள்ளினால் இன்றைய கெடுதியில் 16ல் ஒரு பங்குகூட இருக்காது என்று கல்லுப்போல்மெய்ப்பிக்கலாம்.

மதுபானத்தால் உள்ள கெடுதி இந்த இரண்டுதான். அதாவது பண நட்டம், புத்திக் கேடு. இந்த இரண்டிற்கும் காரணம் மது அல்ல; நமது சர்க்கார் என்கின்றோம். இதை அறிவாளிகள் சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

1. கள்ளினால் பணநஷ்டம் எப்படி ஏற்படுகிறது என்றால் சர்க்கார் மது இலாக்காவை எடுத்துவிட்டுக் கட்டுக்காவல்களையும் எடுத்துவிட்டு சாதாரணமாக இந்த வியாபாரம் தெளிவு—பனஞ்சாறு, தித்திப்புக்கள், பதனி என்கின்ற பெயரால் வழங்கப்படும் பானம் போல் விட்டுவிட்டால் கள்ளின் விலை அதாவது இன்று ஆறு அணாவிற்கு விற்கும் விலை மாறி ஒரு அணா அல்லது முக்கால் அணாவுக்கு விற்கமுடியும்.

ஆனால் இப்பொழுது கள்ளு வியாபாரத்துக்கு ஒரு இலாக்கா ஏற்படுத்திக்கொண்டு இருப்பதால் ஒரு தென்னை மரத்திற்கு 6மாதத்துக்குமரத்துக்காரருக்கு 5-முதல் 10 ரூ. கள் இறக்கிக் கொள்ள குத்தகையும், சர்க்காருக்கு 6-மாதத்துக்கு ஒரு மரத்துக்கு சட்டி கட்ட 5-ரூபாயும், அப்படி 100 மரத்துக் கள் கொண்டுபோய் விற்பனை செய்ய ஒரு கடைக்கு மாதம் சராசரி 250 ரூபாய் போல் லைசென்ஸ் கட்டவும், இந்த 250 ரூபாய் மாதம் லைசென்சு உள்ள கடைக்குச் சர்க்கார் மதுபான இலாக்கா சிப்பந்திகளுக்குச் சராசரி மாதம் 200 போல் மாமூல் கொடுக்கவுமான இவ்வளவு செலவையும் அதன்மீது ஏற்றுவதால் ஒரு

அணா கள்ளுக்கு ஆறு அணா ஏழு அணா விலை ஆகும்படியான நட்டம் ஏற்படுகின்றது. மதுபான இலாகா இல்லாவிட்டால், கள்ளினால் பொருள் நட்டம் முக்காலே அரைக்கால் பாகம் குறைந்து விடும்.

அடுத்த கேடு புத்திக் கோளாறு என்பது.

2. புத்திக்கோளாறுக்கு வெறிதரும் போதை உண்டாக்குவதற்கு ஏற்ற குணம் கள்ளில் இயற்கையாய் அதிகம் இல்லை, நாம் உண்ணும் வஸ்துக்கள் பெரும் பாகத்தில் போதை குணம் ஒரு அளவுக்கு இருந்துதான் வருகிறது. அரிசியில் உண்டு, சோற்றுத் தண்ணீரில் உண்டு, மோரில் உண்டு, சில பழங்களில் உண்டு, இப்படியாக இன்னும் அனேக வஸ்துக்களில் உண்டு. கள்ளில் சிறிது அதிகம் இருக்கலாம் என்றாலும் புத்தியை விகாள ஜன்னி வந்தவன் போல் கோளாறாக்கும் தன்மைக்கு ஏற்ற அளவு அதில் இல்லை. கண்டிப்பாக இல்லை டாக்டர்கள் அபிப்பிராயங்களைக் கேட்கலாம். வைத்திய புத்தகத்தையும் பார்க்கலாம். இந்த இரண்டில் நம்பிக்கை இல்லாதவர்கள் ஒரு தென்னை மரத்தடிக்குச் சென்று காலை 6மணிக்கு மரத்திலிருந்து கள் இறக்கி வடிகட்டி உடனே ஒரு படி சாப்பிட்டுப் பார்க்கலாம். அல்லது அது மகா பாபம், தோஷம், பாதகம் என்று எண்ணுகிறவர்கள் ஒரு நல்ல, அல்லது புது குடிகாரர்களுக்குக் கொடுத்துப் பார்க்கலாம். கண்டிப்பாக அதைக்குடித்தவன் உளறவேமாட்டான், புத்தித் தடுமாறி பேசவும் மாட்டான். ஆதலால் கள்ளில் புத்தி கெடுக்கும் வெறி இல்லை என்கின்றோம்.

<u>மற்றபடி வெறி எப்படி</u> உண்டாகின்றது என்றால் கள் விற்பனை செய்பவர்கள் அந்தக் கள்ளை பயன்படுத்துகிற மாதிரியாலேயே அது விஷத்தன்மை அடைந்து போதை ஆகின்றது அதாவது பல மரத்துக் கள்ளை ஒன்று சேர்ப்பது, அதிலுள்ள பூச்சிப் புழுக்கள் உயிரோடும் செத்தும் அதில் ஊறி சத்து இறங்குவது, வெய்யிலில் பட்டு கள்ளில் ஒருவித பொங்குதல் ஏற்பட்டு நுரை உண்டாகி புளிப்பு ஏற்படுவது; புளித்த பழய கள்ளின் அடிமண்டியை (அழுக்குச்சேற்றை) தினம் தினம் புதிய கள்ளுடன் கலக்குவது, மற்றும் போதை உண்டாக்கும் வஸ்துக்களை அதில் கலக்குவது முதலாகிய காரியங்களால் கள்ளில் வாசனை, (நாற்றம்) புளிப்பு, வெறி உண்டாக்கும் போதைத் தன்மை முதலியன உண்டாகின்றதோடு கள்ளில் இயற்கையாக உள்ள சில நல்ல குணமும், பயனும்கூட கெட்டுப் போகின்றன.

ஆதலால் கடைகளை எடுத்து விட்டால், பல மரத்துக் கள்ளை அழுக்கோடு கலந்து சேர்த்துவைத்து விற்பதைத் தடுத்துவிட்டால் புத்திக்கோளாறு தன்மையும் பெரும்பாகம் குறைந்துவிடும். மற்றபடி அதன் (கள்ளின்) நன்மையைப் பற்றி இங்கிலீஷ் டாக்டர்கள் நாட்டு வைத்தியர்கள் ஆகியவர்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

எது எப்படி இருந்தாலும் சர்க்கார் இதை இந்த, திராவிட நாட்டில் மூன்றில் ஒரு பாகத்துக்கு மேற்பட்ட எல்லைப் பிரதேசத்தில் சர்க்கார் மூலம் செய்துவந்த மது விற்பனையை நிறுத்திக்கொண்டது பாராட்டக்கூடியதேயாகும். இந்தசாக்கினால் சர்க்கார் மேலும் ஏராளமான பண வருவாய் உண்டாக்கிக்கொண்டு நஷ்டமில்லாமல் தப்பித்துக்கொண்டதும் புத்திசாலித்தனமேயாகும்.

“இந்தக் காரியத்தை இதற்கு முன் இருந்த சர்க்கார் செய்திருக்கலாம். ஏன் செய்யவில்லை” என்பது சிலருக்கு நல்ல கேள்வியாக இருக்கலாம். ஆம் செய்யவில்லைதான், காரணம் முன்பு இருந்த சர்க்காருக்கு இவ்வளவு பலம் இல்லை.

1. வரிபோட்டால் பாமர மக்களைத் தூண்டிவிடுவார்கள் பத்திரிகைக்காரர்களும் பார்ப்பனர்களும்.

2. கள்ளுக்கடைக்காரரையும் தென்னந்தோப்புக்காரர்களையும் தூண்டிவிட்டு கலகமும், காலித்தனமும் செய்யும்படி ஆக்கி விட்டுவிடுவார்கள்.

3. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் மற்றக் கட்சிக்கு இவ்வளவு காலிகள் சுவாதீனமில்லை.

4. இவ்வளவு சுயேச்சை அதிகாரமில்லை. அதாவது, இதுவரை இருந்த (35ம் வருஷத்துக்கு முந்தின) ஆட்சி இரட்டை ஆட்சி மிதி இலாக்கா வெள்ளையர் வசம்.

5. இதற்குமுன் இருந்த கட்சியில் ஒற்றுமை கட்டுப்பாடு இல்லை. இனத்துரோகிகள் பெரிதும் ஒன்றுசேர்ந்த கனிநலக் கட்சியாக இருந்தது.

இன்றைய பதவியில் இருப்பவர்கள் கட்சி, இன அபிமானிகள் ஒன்று சேர்ந்த இன (பார்ப்பன) நல கூட்சி கட்சியாக இருந்து வருகிறது.

இவ்வளவுதானே தவிர மற்ற கட்சியார் கவலை இல்லாமலோ அல்லது மக்கள் குடிக்கவேண்டுமென்ற எண்ணத்துடனோ இருக்கவில்லை.

மேலும் இன்றைய சட்டசபை மெம்பர், காரியதரிசிகள், மந்திரிகள் ஆகியவர்களைவிட குறைந்த மதுப்பிரியர்களோ யாவார்கள் முன்பிருந்தவர்கள்.

பொதுக்கூட்டம்

6-10-46ந் தேதி போளூரில் மாலை 6-மணிக்குக் கோபால் ரேடியோ ஸ்டோர்ஸ் எதிரில் திராவிடர் கழகத்தின் சார்பில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். அதுகாலை தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள். கூட்டத்திற்கு ஒலிபெருக்கி உண்டு. இயக்கத் தோழர்கள் கருஞ்சட்டையணிந்து மாலை 4மணிக்கு நடைபெறும் ஊர்வலத்தில் கலந்துகொள்ளும் வண்ணம் போளூர் தோழர் சுப்பையன் அவர்களால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

எப்படியானாலும் மதுவியாபாரம் 8 ஜில்லாவில், இம்மாகாணத்தில் 1/3 பாகத்தில் நிறுத்தப்பட்டது பாராட்டுதற்குரியதுதான். ஆனால் மற்ற இரண்டு பாகத்திலும் உடனடியாக நாளை வருஷமே நிறுத்தினால்தான் இதில் அரசியல் அதிகார வெறிசூழ்ச்சி, பார்ப்பனசூழ்ச்சி இல்லை என்னலாம்.

சர்க்காருக்கு ஒருயோசனை. மதுவிலக்கால் "திருட்டுக்கள் நடக்கிறதே" என்று பயப்பட வேண்டியதில்லை. சிலநாளைக்குச் சில இடங்களில் நடந்துதான் தீரும். மற்ற ஜில்லாக்களிலும் நிறுத்தப்படுவதுதான் அதற்குப் பெரும் அளவு பரிகாரமாகும். தொழில் இழந்தவர்களுக்குத் தொழில் தேடிக்கொடுக்க பம்பாய் முதலிய வெளிநாட்டுச் சரக்குகள் யாவற்றையும் உடனே நிறுத்திவிட்டு தொழில் சாலைகள் சிறுசிறு தொழில்சாலைகள் உடனே துவக்கவேண்டும். முதலாளிக்கும் தொழிலாளிக்கும் செலவு போக பங்கு ஏற்படுத்திவிட வேண்டும்.

மற்றவை மறு சமயம்.

வாழ்க்கை ஒப்பந்தங்கள்

15-9-46ல் சென்னையில் தோழியர் குஞ்சிதம் குருசாமி அவர்கள் தலைமையில் தோழியர் கனகவல்லியும், தோழர் சச்சிதானந்தமும் வாழ்க்கை ஒப்பந்தம் செய்துகொண்டனர். ஜீவா, எஸ். குருசாமி, ஸ்ரீபால், முத்துகுமாரசாமி ஆகிய தோழர்கள் பேசினார்கள். அதன் நினைவாகக் குடியரசு வளர்ச்சிக்கு ஒரு ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

தீபாவளி கொண்டாடாதீர்!

தீபாவளிப் பண்டிகை நம் நாட்டிற்குரியதல்லவென்றும், திராவிடரின் மானத்தைக் குலைப்பதெனவே திராவிட நாட்டில் ஆரியர்களால் புகுத்தப்பட்ட பண்டிகையென்றும் நாம் பல ஆண்டுகளாகக் கூறி வந்துள்ளோம். எனவே வழக்கம்போல் இவ்வாண்டிலும் நம் இயக்கத் தோழர்கள் தீபாவளிப் பண்டிகைக் கொண்டாட வேண்டாமென்றும், ஆங்காங்கு கூட்டங்கள் போட்டு தீபாவளிப் பண்டிகையை ஏன் கொண்டாடக் கூடாதென்பதை விளக்கிப் பேச வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறோம். தீபாவளியைப் பற்றி அடுத்த வாரம் விளக்குவோம்.

(ஆ-ர்)

13-9-46ல் திருவாரூர் திராவிடர் கழகத்தில் தோழர் சிவானந்தம் அவர்கள் தலைமையில் ஆம்பூர் அஞ்சம்மாள்—பக்கிரிசாமி வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. தோழர்கள் விசுவராஜு வி. ஜி. நடராசு வாழ்த்துரை பகர்ந்தனர். குடி அரசு வளர்ச்சிக்காக ஒரு ரூபாய் நன்கொடை அளிக்கப்பட்டது.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருகைப் புல் விளைந்த இடத்தில், இரண்டு கைப்புல் விளைவிக்க, எந்த நூலை இயற்றியுள்ளான்? எந்த மகாத்மா அல்லது எந்த வேதாந்தி பத்து மனிதர்களைக்கொண்டு நெய்யப்படும் ஆடையை ஒரு மனிதனைக்கொண்டு நெய்யும்படியான இயந்திரத்தைக் கண்டுபிடித்துள்ளான்? இந்தக் காலத்திலுமில்லை, எந்தக் காலத்திலுமில்லை. ஏன்? இவர்களும் இவர்கள் மரபினரும், உண்ணவும், உடுக்கவும், இருக்கவும், படிக்கவும், சோம்பித்திரியவும், வழி தேடிக்கொண்டிருப்பதாலென அறிக. செல்வசம்பத்தை அடைய அதற்கு வேண்டிய வசதிகளாகிய, சட்டதிட்டங்கள், பலவித பாதுகாப்புகள், போலீஸ் பந்தோபஸ்துக்கள், கோர்ட்டு கொத்தளங்கள் முதலியவற்றையும், தளகர்த்தர்களையும் அவர்கள் தங்கள் இஷ்டப்போல் அமைத்துக்கொண்டார்கள். ஆனால் மற்ற கோடான கோடி மக்களை, அந்தகார இருளில் வைத்துக்கொண்டு அவர்கள் பூசை, நைவேத்தியம், திதி, திவசம், விக்கிரக ஆராதனை, உற்சவம், கோவில், குளம், இவைகளுக்கு வாணவேடிக்கை முதலிய வீண் ஆடம்பரங்களில் உழன்றுகிடக்க, வேதநூல்களையும், ஆசாரங்களையும், மதவேற்றுமையையும் ஜாதிவேற்றுமையையும், மூடபக்தி, மூடநம்பிக்கை, மூட பழக்கவொழுக்கங்கள், விக்கிரகப் பூச்சாண்டிகள் முதலியவற்றையும் அமைத்து அவர்களைக் கெடுத்துவிட்டனர். இத்தியாதி மோசத்தால், பெரும்பான்மை உலக மக்கள், தங்கள், உரிமைகளை மறந்து, அடிமைகளாகி, பசியாலும், பிணியாலும் வருந்தி வாடுகின்றனர். (தொடரும்)

சென்னையில் பெரியார் வார விழா

கடற்கரையில் 50,000 மக்கள் கொண்ட மாபெரும் கூட்டம்

இந்தி எதிர்ப்புக் காலத்தை சென்னை வாசிகளுக்கு நினைவூட்டக்கூடிய வகையில், 26-9-46 மாலை 5 மணிக்கு அவ்வளவு பெரிய ஊர்வலம் பீப்பிள்ஸ் பார்க்கிலிருந்து புறப்பட்டு சென்னைக் கடற்கரைக்கு வந்தது.

மதுரைக் கருஞ்சட்டைப்படை மாநாட்டிற்கு அடுத்தபடியாக இவ்வளவு பெரிய கருஞ்சட்டைப்படைத் தோழர்களின் ஊர்வலம் வேறெந்த ஊர்களிலும் நடைபெற்றிருக்க முடியாது. கருப்புத்துணி கிடைக்காத காரணத்தினால் குறைந்தது ஆயிரம் பேர்களாவது கருஞ்சட்டை அணிய முடியாமல் வருந்தப்பட்டார்கள் என்பதும் மிகையாகாது.

கருஞ்சட்டைப்படை ஊர்வலங்கள் சென்னையின் பல பகுதிகளிலிருந்தும் புறப்பட்டு சரியாக 4-45 மணிக்கு 'பீப்பிள்ஸ் பார்க்கை' அடைந்தன.

மேற்கு சென்னை தாதாமுத்தப்பனிலிருந்து புறப்பட்டு பெரிய பெரிய திராவிட கழகக் கொடிகளுடன் வந்த கருஞ்சட்டைப்படை ஊர்வலத்திற்கு தோழர் ஆரிய சங்காரன் தலைமை தாங்கி அழைத்துவந்தார். அவருக்கு வழிநெடுகப் பல இடங்களில் மலர் மாலைகள் சூட்டப்பட்டன. வண்ணாரப்பேட்டை ஜெயராம் நாடார் மைதானத்திலிருந்து புறப்பட்டு வந்த வட சென்னைப் படை ஊர்வலம் பெத்துநாய்க்கன் பேட்டை தங்கசாலை வழியாக தோழர் எஸ். ஆர். சாண்டோ தலைமையில் வந்தது. சிந்தாதிரிபேட்டை நேப்பியர்ஸ் பார்க்கிலிருந்து வந்த தென்சென்னைப் படைக்குத் தோழர் சுபாலமூர்த்தி தலைமை வகித்தார். தோழர்கள் சி. கணேசன், என். எஸ். தங்கருபன், எம். எஸ். எம். மொய்தீன், வி. டி. பெரியசாமி, எம். கே. அண்ணாமலை, ஆர். டி முனுசாமி, சி. ஆர். சின்னப்பன், எம். கே. டி. சுப்பையன், கே. கோவிந்தசாமி, மயிலை வ. சாமிநாதன், எம். கே. மூர்த்தி ஆகியவர்களும் மற்றும் பல பிரமுகர்களும் ஊர்வலத்தை அணிவகுத்து ஒழுங்காக நடத்தி வந்தனர்.

இரண்டுபேர் கொண்ட வரிசையாக சுமார் 1090 பேர்களுக்குக் குறையாத கருஞ்சட்டைப்படை வீரர்களும் மற்றும் பத்தாயிரம் தோழர்களும் ஊர்வலமாக தோழர் ஜீவரத்தினம் தலைமையில் 'பீபிள்ஸ் பார்க்'கை விட்டுச் சரியாக 5 மணிக்குப் புறப்பட்டனர். படைத் தலைவர்களுக்கு மாலை அணிவிக்கப்பட்டதும், தோழர் சி. டி. டி. அரசு, படையினர் கடற்கரை செல்லும் வரையில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை விளக்கிப் பேசினார்.

'பெரியார் வாழ்க,' 'தளபதி அண்ணாதுரை வாழ்க,' 'திராவிடநாடு திராவிடருக்கே,' 'திராவிட நாட்டை அடைந்தே தீருவோம்,' 'வடநாட்டுச் சுரண்டல் ஒழிக,' 'ஆங்கில ஏகாதிபத்தியம் ஒழிக,' 'கருஞ்சட்டைப்படை வாழ்க' என்ற ஒலிகளுடன், ஊர்வலம் சிந்தாதிரிப்பேட்டை டிராம் லைன் வழியாக மவுண்ட்ரோடுக்குச் சென்று திருவல்லிக்கேணி டிராம் ரோடு வழியாகவும், பைகிராப்ட்ஸ் ரோடு வழியாகவும் போய், திருவல்லிக்கேணி கடற்கரையை அடைந்தது.

வழிநெடுக தெருக்களின் இருபுறங்களிலும் பல்லாயிரக் கணக்கான பொதுமக்கள் நின்று ஊர்வலத்தைக் கண்டு களித்ததுடன், பல இடங்களில் வாழ்த்தொலிகளுடன் கலந்துகொண்டதும் குறிப்பிடத்தக்கது.

கருஞ்சட்டைப்படை ஊர்வலத்தைத் தொடர்ந்து, சுமார் 1000 மக்கள் அணி அணியாக வந்ததும், ஆங்காங்கு ஆயிரக்கணக்கான முஸ்லிம் தோழர்களும், தொழிலாளத் தோழர்களும் ஊர்வலத்தில் கலந்துகொண்டதும் திராவிட கழகத்திற்குப் பொது மக்கள் தரும் பேராதரவை மெய்ப்பித்துக் காட்டியது.

பைகிராப்ட்ஸ் ரோடு வழியாகப் போகும்போது, அங்கு நின்று வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்த நூற்றுக்கணக்கான ஆரியப் பார்ப்பனரின் முகம் சுருங்கியிருந்ததும், அவர்களது அடி வயிற்றில் இடி விழுந்ததுபோல, ஊர்வலத்தைக்கண்டு நடுங்கியதும், நேரிற் கண்டவர்களே நன்கு உணர முடியும்.

ஊர்வலம் போலீஸ் உதவி என்பதே இல்லாமல், படைத் தலைவர்களின் மேற்பார்வையில் ரோடின் ஓரத்தில் ஒழுங்காக அணிவகுத்து, போக்குவரத்துக்குக் கஷ்டமேயில்லாமல் சென்றது பெருமைபடக்கூடியதும், பாராட்டுக்குரியதுமாகும்.

ஊர்வலம் மவுண்ட்ரோடு வட்டத்தைச் சுற்றி வந்துகொண்டிருந்த சமயத்தில் மட்டும், சுமார் 20 நிமிஷ நேரம் வரையில் பஸ்கள், டிராம்கள் முதலிய எல்லாம் நூற்றுக்கணக்கில் நின்றுவிடும்படியாக நேர்ந்தது. அங்கு வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த பொதுமக்கள் மட்டும் ஆயிரக் கணக்கில் இருப்பர்.

பொதுக்கூட்டம் தொடங்கியதும் தோழர்கள் இயக்கப் பாடல்களை பாடினர். குறைந்தது 50 ஆயிரம் பேர்களுக்குமேல் கூடியிருந்தனர்.

பச்சையப்பன் கல்லூரி ஆங்கிலப் பேராசிரியர் தோழர் வரதராஜன் அவர்களைத் தலைமைதாங்குமாறு தோழர் சி. டி. டி. அரசு முன்மொழிந்தார். தோழர் திராவிடமணி வழிமொழிந்து பேசுகையில், பெரியாரவர்களின் தன்னலமற்ற பொதுத்தொண்டினைப் பாராட்டிக் கூறிவிட்டு திராவிடர் கழக நிதிக்கு எல்லோரும் தாராளமாகப் பொருளுதவி செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

தோழர் வரதராஜன் தலைமையுரையாகப் பேசுகையில், பொதுக் கூட்டத்தில் தான் தமிழில் பேசுவது இதுதான் முதல் தடவை என்றும், பெரியார் ஜஸ்டிஸ் கட்சித் தலைமையை ஏற்றுக்கொண்ட பிறகுதான், பணக்காரர்களின் ஏகபோகச் சொத்தாயிருந்து வந்த அந்தக்கட்சி ஏழைகளின் சொத்தாக மாறியது என்றும் குறிப்பிட்டார்.

அவர் மேலுங் கூறியதாவது:—

"ஜஸ்டிஸ் கட்சியிலிருந்த பணக்காரர்

களும், ஜமீன்தார்களும், பெரிய பெரிய வட்டிக்கடைக்காரர்களும் அக்கட்சியை விட்டுவிட்டு ஓடிப்போன பிறகுதான், பெரியார் அதன் தலைமையை ஏற்றுக்கொண்டார். தொழிலாளர்களுக்கும், ஏழைமக்களுக்கும் உள்ள கொடுமைகளை நீக்கி, அவர்களது உரிமைகளைப் பெறுவதற்காகவே திராவிடர் கழகம் பாடுபட்டு வருகிறது. பெரியாரவர்களின் இடைவிடாத உழைப்பின் பயனாக, இனி அந்தக்கட்சி அதிதீவிரமான நடவடிக்கைகளில் இறங்கி, திராவிட நாட்டைப் பெறுமே தீருமென்பது நிச்சயம்."

தோழர் என். ஜீவரத்தினம் பேசுகையில் கார்ல் மார்க்ஸ் தத்துவத்தை தமிழ் நாட்டில் நிலைநிறுத்தியவர் எங்கள் தலைவர் பெரியார் என்பதை எவரும் மறுக்கமுடியாது; அன்று காங்கரசுடன் கூடி எங்களை எதிர்த்த கம்யூனிஸ்ட் தோழர்கள் இன்று திராவிடர் இயக்கக் கொள்கையே தொழிலாளர் விடுதலைக்கு உகந்தது என்பதை உணர்ந்து வருவதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன் என்று கூறினார்.

தோழர் என். வி. நடராசன் பேசுகையில் "[illegible]" பத்திரிகை தோழர் பிரகாசம் பிறந்த [illegible] மட்டும் தலையங்கக் குறிப்பு [illegible] விருப்பத்தை எடுத்துக்காட்டி, பெரியார் அவர்களை, (பார்ப்பனப் பத்திரிகைகளைப்போலவே) "திரு ஈ. வெ. ராமசாமி" என்ற பெயருக்குப் பின்னால் 'நாய்க்கர்' என்று குறிப்பிடுவதையும் கண்டித்துப் பேசியதுடன் ஆரிய ஆங்கிலேய உறவை மெய்ப்பிக்கும் வகையில் 21-9-46ல் புறப்பட்ட புஞ்சவண்டன் எக்ஸ்பிரசில் என்ஜின் முனபாக பிரிட்டிஷ் கொடியும், மூவர்ணக்கொடியும், பறக்கவிட்டும், பொன் எழுத்தில் ஜே. வி. ரெமினால்ட்ஸ் என்று பொறிக்கப்பட்டிருந்ததை எடுத்துக்காட்டி, காங்கரசின் தற்காலப் போக்கு வெள்ளைக்காரருக்கு அடிபணிவதேயல்லாமல், வெளியேற்றுவதல்ல என்றும் ரெயில்வே தொழிலாளர் வெற்றி கம்யூனிஸ்ட்—திராவிட கழக வெற்றி என்றும் பெரியாரின் சேவையையும் கூறினார்.

தோழர் எ. பி. ஜனார்த்தனம், தாங்கரசிலுள்ள திராவிடர்கள் முதல் எல்லா திராவிடர்களும், வெள்ளையன் முதல், வடநாட்டுக் கொள்ளையன் வரை எவனும் அடிமையாயிராமல் தன் மானத்துடன் வாழ்ந்து தன் நாட்டையும் ஆளவேண்டுமென்ற கொள்கைக்காகப் போராடி சிறை சென்றும், இன்றும் இனியும் உழைப்பவர் பெரியார் ஒருவரே என்று கூறினார்.

தோழர் கே. அன்பழகன் பெரியார் அவர்கள் காங்கரசில் தொண்டாற்றியதிலிருந்து, சுயமரியாதை இயக்கம், இந்திப்போர் திராவிடர் இயக்கம், ஆகியவைகளுக்காக இன்றுவரை போராடிவரும் விவரங்களையும், அதற்கேற்ப முஸ்லீம்லீக் தோழர்களும், தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன் தோழர்களும் திராவிடர் இயக்கக் கொள்கைக்காகக் கொடுத்துவரும் ஒத்துழைப்பையும் விளக்கி சுமார் $1\frac{1}{4}$ மணி நேரம் பேசினார்.

தோழர் சி. டி. டி. அரசு பேசுகையில், தாம்பரத்தின் அருகிலுள்ள "பெரியார் நகர்" திறப்புவிழாச் சின்னத்தில் (கட்டிடத்தில்) பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்களை மறைக்கும் நோக்கத்துடன் சில காலியன் கல்லாலடித்துப் பாழாக்கி வருகிறார்கள் என்றும், [illegible] உடந்தையாயிருப்பவர்கள் [illegible] இரண்டு அய்யங்கார்கள் [illegible] யாதரிச் செய்கையை வன்மையாகக் கண்டிப்பதாகவும், இனி இம்மாதிரிக் காலித்தனங்கள் நிறுத்தப்படாவிமல், சென்னையிலுள்ள பார்ப்பனர் ஆங்கிலேயர் சிலைகளும், பழிக்குப்பழியான செயல்களுக்கு உள்ளாகுமென்றும் எச்சரிக்கை செய்தார். பிறகு 'லிபரேட்டர்' பத்திரிகை திராவிடர் கழக விஷயத்திலும், குறிப்பாகப் பெரியாரைப்பற்றிய செய்தியிலும், மிகவும் பிற்போக்கான முறையில் நடந்துகொண்டு வருவதைக் கண்டித்துப் பேசினார்.

தோழர் அப்துல் காதர், ஜனாப் ஜின்னா போன்று திராவிட நாட்டில் அரசியல் ஞானி பெரியார் ஒருவரே என்று கூறினார்.

பிறகு இரயில்வேத் தொழிலாளர்களின் இணையற்ற வெற்றியைப் பாராட்டியும், காங்கரஸ் ஆட்சி அடக்குமுறைக்குப் பலியான ஐந்து பொன்மலைத் தோழர்களின் குடும்பங்களுக்கு அனுதாபம் தெரிவித்தும், எட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தலைவரின் முடிவுரைக்குப்பிறகு தோழர் கே. கோவிந்தசாமி நன்றி கூறுகையில், சு மி. பத்திரிகை ஆசிரியர் சி. ஆர். சீனிவாசன் சென்ற வாரத்தில் எஸ். சீனிவாச ஐயங்காரின் சேவையைப் பற்றிப் பேசியபோது தென்னாட்டில் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை வேரறுத்தவர் சீனிவாச ஐயங்கார், என்று பேசியதைக் கண்டித்துப் பார்ப்பனரல்லாதார் இயக்கம் ஆரியத்தை வேரறுக்க இன எழுச்சிகொண்டு திராவிடர் இயக்கமாக வளர்ச்சியடைந்திருப்பதை எடுத்துக்காட்டியும் கருப்புச் சட்டை சம்பந்தமாக பெரியார் சென்னையைப்பற்றி கொண்டிருந்த குறையை இன்று சென்னை நிவர்த்தித்துவிட்டதை எடுத்துக் கூறியும் பேசினார். இரவு 9-15 மணிக்கு கூட்டம் இனிது முடிந்தது.

o o

மயிலாப்பூர்

23-9-46 மாலை 6மணிக்கு மயிலாப்பூர், திருவல்லிக்கேணி திராவிடர் கழகங்களின் ஆதரவில் மயிலாப்பூர் முண்டக்கண்ணி அம்மன் கோயில் தெருவில் பெரியார் பிறந்த வாரக்கொண்டாட்டம் தோழர் என். ஜீவரத்தினம் அவர்கள் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. கே. கோவிந்தசாமி, கோதண்டபாணி, எஸ். எம். அப்துல் காதர் ஆகிய தோழர்கள் பெரியார் பெருந்தொண்டை விளக்கிப் பேசினார்கள். தலைவர் முடிவுரைக்குப்பின் தோழர் தங்கவேலனார் நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

உரிகம்

22-9-46ல் இவ்வூரில் தோழர் எஸ். மகாதேவன் அவாகளின் தலைமையில் பெரியார் விழா கொண்டாடப்பட்டது. தனபால், மாணிக்கம், பொன்னுசாமி, செல்வராஜன் முதலிய தோழர்கள் பெரியாரின் தொண்டு குறித்துப் பேசினார்கள். சிறுவர்களுக்கு தின்பண்டங்கள் வழங்கப்பட்டன. தோழர் குப்புசாமி நன்றி கூறினார்.

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42, Catchery street, ERODE.